### ஆவடி, கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனைகளில்

# கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை: அமைச்சர் சா.மு.நாசர் நேரில் ஆய்வு



**திருவள்ளூர், மே 18–**

**ஆவடி மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய அரசு மருத்துவமனைகளில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை அமைச்சர் சா.மு. நாசர் நேரில் ஆய்வு செய்தார்.**

திருவள்ளூர் மாவட்டத்தில் ஆவடி அரசு மருத்துவமனையில் பால்வளத்துறை அமைச்சர் சா.மு.நாசர் மற்றும் மாவட்ட கலெக்டர் ஆகியோர் முழு உடற் கவசத்துடன் கொரோனா வார்டில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளை நேரில் சென்று பார்வையிட்டு, அவர்களுக்கு அளிக்க படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்து அவர்களுக்கு ஆறுதல் கூறினர். இங்கு 50 ஆக்சிஜனுடன்கூடியபடுக்கைகளில் தயார்படுத்தப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக ஆக்சிஜடன் கூடிய 10 படுக்கைகளில் நோயாளிகள் உள்ளனர். மீதி ஆக்சிஜடன் கூடிய 40 படுக்கை வசதிகள் ஓரிரு நாட்களில் பயன்பாட்டிற்கு வரும் எனவும், நோயாளிகளுக்கு சரியான முறையில் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என மருத்துவர்களிடம் அறிவுறுத்தினர். மருத்துவமனையில் ஆக்சிஜன் போதுமான அளவு இருப்பு உள்ளதா என ஆய்வு மேற்கொண்டு, நோயாளிகளுக்கு உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் சரிவர வழங்கப்படுகிறதா என்பதையும் கேட்டறிந்தனர்.

இதனைத் தொடர்ந்து, ஆவடி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக காய்கறி சந்தையினை பார்வையிட்டு பொதுமக்கள் பொருட்களை சமூக இடைவெளியுடன், முக கவசம் அணிந்து பொருட்களை வாங்கிச் செல்ல வியாபாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பின்னர், அமைச்சர் அவர்கள் மற்றும் மாவட்ட கலெக்டர் ஆகியோர் கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனையில் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கையாக நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு மருத்துவரிடம் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்து கும்மிடிப்பூண்டி நவீன ஒருங்கிணைந்த சோதனைசாவடிக்கு அருகில் (அலுவலர்கள் வசதி கட்டடம் வகை1) அமைக்கப்பட்டு வரும் ஆக்சிஜனுடன் கூடிய படுக்கை வசதி பணிகளை குறித்தும், பெரியபாளையம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வார்டில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர்.

அமைச்சர் சா.மு. நாசர் செய்தி யாளர்களிடம் தெரிவித்ததாவது :

திருவள்ளூர் மாவட்டத்தில் தனியார் மருத்துவமனையின் சார்பாக ஆக்சிஜனுடன் கூடிய 1480 படுக்கைகளும், அரசு சார்பில் ஆக்சிஜன் வசதிகளுடன் கூடிய 480 படுக்கைகளும் தயார் நிலையில் உள்ளது. பொதுமக்கள் தேவையின்றி வெளியில் சுற்றி திரிவதும், அத்தியாவசிய தேவையின்பொழுது முககவசம் அணிந்து, சமூக இடைவெளியுடன் செல்ல வேண்டும். பொதுமக்கள் தேவையின்றி அச்சம் அடைய வேண்டாம். பொதுமக்கள் அரசின் வழிமுறைகளை பின்பற்றி கொரோனா தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள் வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இவ்வாய்வின்போது கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே.கோவிந்தராஜன், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை க.லோகநாயகி, ஆவடி மாநகராட்சி ஆணையர் நாராயணன், பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் செல்வம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கோ.உமா மகேஸ்வரி, இணை இயக்குநர் (குடும்ப நலம் (ம) ஊரகநலப்பணிகள்) மரு.ராணி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. ஜவஹர்லால், ஆவடி வட்டாட்சியர் செல்வம், மருத்துவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# துளசி ஐயா வாண்டையார் மரணம்: எடப்பாடி, ஓ.பி.எஸ். இரங்கல்



**சென்னை, மே 18–**

**முன்னாள் எம்.பி. துளசி ஐயா வாண்டையார் மறைவுக்கு எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.**

இது குறித்து அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமானஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

மகாத்மா காந்தியின் தீவிர சீடரும், பெருந்தலைவர் காமராஜரின் நெருங்கிய நண்பரும், முன்னாள் அமைச்சருமான அய்யாறு வாண்டையாரின் மூத்த சகோதரரும், தஞ்சாவூர் தொகுதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஸ்ரீமான் துளசி ஐயா வாண்டையார், வயது முதிர்வின் காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு மரணமடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு மிகுந்த வருத்தமுற்றோம்.

தீவிர காந்தியவாதியும், பெரும் நிலக்கிழாருமான துளசி ஐயா வாண்டையார், தஞ்சாவூர் மாவட்டம், பூண்டி கிராமத்தில், பூண்டி புஷ்பம் கலை அறிவியல் கல்லூரியை நடத்தி வருபவர். இக்கல்லூரியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு இலவச உயர்கல்வி அளித்து வந்த பெருந்தகையாளர்.

சிறந்த பண்பாளரும், இலக்கிய வாதியும், ஆன்மிக நாட்டம் கொண்டவருமான துளசி ஐயா வாண்டையாரை இழந்து வாடும் அண்ணன் அய்யாறு வாண்டையாருக்கும், அவரது குடும்பத்தினருக்கும், அவர்மீது பேரன்பு கொண்டிருப்பவர்களுக்கும், அண்ணா தி.மு.க.வின் சார்பில் எங்களது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், துளசி ஐயா வாண்டையாரின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இவ்வாறு எடப்பாடி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் கூறியுள்ளனர்.

### கொரோனா பரவல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

# மாமல்லபுரம் அருகே 2 மீனவ கிராமத்தில் வெளிஆட்கள் ஊருக்குள் வர தடை: சாலையில் தடுப்புகள் அமைப்பு



*காஞ்சீபுரம், மே 18–*

மாமல்லபுரம் அருகே 2 மீனவ கிராமத்தில் கொரோனா பரவல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெளிஆட்கள் ஊருக்குள் வர தடை விதிக்கப்பட்டு சாலையில் தடுப்புகள் அமைத்து மீனவ பஞ்சாயத்தார் நடவடிக்கை மேற்கொண்டனர்

செங்கல்பட்டு மாவட்டத்தில் கொரோனா தொற்று நாளுக்கு நாள் அதிகம் பரவி பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். தினமும் பல இடங்களில் நோய் தொற்று முற்றிய நிலையில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு பலர் இறந்து வருகின்றனர்.

இதனால் தங்கள் பகுதிகளில் நோய் தொற்று பரவாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாமல்லபுரம் அடுத்த கொக்கிலமேடு மற்றும் வெண்புருஷம் மீனவ கிராமத்தில் வெளி ஆட்கள் யாரும் ஊருக்குள் இரு சக்கர வாகனம், கார், ஆட்டோக்களில் தங்கள் உறவினர் வீடுகளுக்கும், மீன் வாங்கவும் வராதபடி தடை விதித்து ஊர் நுழைவு வாயிலில் சாலையில் கற்கள் கொட்டியும், கம்புகளால் தடுப்புகள் அமைத்தும் ஊர் பஞ்சாயத்தார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அப்படி தடையை மீறி ஊருக்குள் வரும் நபர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவார்கள் என கொக்கிலமேடு, வெண்புருஷம் ஊர் பஞ்சாயத்தார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த இரு மீனவ பகுதியிலும் கடற்கரை பகுதிகளில் மீன் விற்பனை செய்ய அனுமதி யில்லை எனவும், கல்பாக்கம் அணுமின் உற்பத்தி பிரிவுக்கு செல்லும் சாலையில் மீன் விற்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# சென்னை துறைமுக கப்பல் பணியாளர்களுக்கு தடுப்பூசி போடும் பணி தீவிரம்



**சென்னை, மே.18–**

**கொரோனா தொற்று பரவலைத் தொடர்ந்து கப்பல் பணியாளர்கள் தடுப்பூசி போடுவதை ஊக்குவிக்கும் வகையில் சென்னை துறைமுகம் சார்பில் சிறப்புத் திட்டத்தை துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் சுனில் பாலிவால் தொடங்கி வைத்தார். இத்திட்டம் குறித்து சுனில் பாலிவால் கூறியதாவது:–**

‘கப்பல் பணியாளர்களின் நலனைப் பாதுகாப்பதில் சென்னைத் துறைமுக நிர்வாகம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. கொரோனா தொற்று உலகையே அச்சுறுத்தி வரும் நிலையில் பல்வேறு நாடுகளுக்கு பயணம் செய்யும் கப்பல் பணியாளர்களை இந்த கொடிய நோயிலிருந்து பாதுகாக்கும் விதமாக வருமுன் காப்போம் என்ற அடிப்படையில் தடுப்பூசி போடும் திட்டத்தை தொடங்கியுள்ளோம்.

இதில் பங்கேற்க விரும்பும் கப்பல் பணியாளர்கள் தங்களது சுய விவரம், செல்பேசி எண், சிடிசி அடையாள அட்டை எண், பணி புரியும் நிறுவனம், முகமை நிறுவனம் உள்ளிட்ட விவரங்களுடன் தலைமை மருத்துவரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தால் அவர்களை உடனடியாக தொடர்புகொண்டு தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கான அழைப்பு அனுப்பி வைக்கப்படும்.

திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் காலை 10 மணி முதல் 12.30 மணி வரை தொடர்ந்து தடுப்பூசி போடப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் துறைமுக பொறுப்புக் கழகத் துணைத் தலைவர் பாலாஜி அருண்குமார், மருத்துவமனை தலைமை மருத்துவர் பத்மா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஊரடங்கு விதிமுறை மீறிய இயற்கை உணவகம் ‘சீல்’

*காஞ்சீபுரம்,மே 18–*

காஞ்சீபுரம்–வந்தவாசி சாலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே இயங்கி வருகிறது அமுதம் இயற்கை உணவகம். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சண்முகப்பிரியா ரோந்து பணியில் இருந்தபோது ஊரடங்கு விதிகளை மீறி அங்கு கூட்டம் காணப்பட்டதை தொடர்ந்து தாலுக்கா காவல்துறையினருக்கு இயற்கை உணவகத்தை மூட உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து இருமுறை உரிமையாளரை எச்சரித்தும் தொடர்ந்து ஒழுங்கீனமாக அரசு விதிகளை மீறி செயல்பட்டதாக பெருநகராட்சியினர் அக்கடையை மூடி சீல் வைத்தனர்.

# காஞ்சீபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு கோவில்கள் சார்பில் 1200 உணவு பொட்டலங்கள்

*காஞ்சீபுரம், மே 18–*

தமிழக அரசு உத்தரவின் பேரில், இந்து சமய அறநிலைத்துறை சார்பில் ஒருங்கிணைந்த காஞ்சீபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் மற்றும் அவரது உதவியாளர்களுக்கு மதிய வேளை உணவாக தினசரி 5 ஆயிரம் உணவு பொட்டலங்கள் வழங்கும் பணி கடந்த 12ம் தேதி முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் காஞ்சீபுரம் வழக்கறுத்தீஸ்வரர் கோவில் சார்பாக 600 உணவு பொட்டலங்களும், வரதராஜ பெருமாள் கோவில் மற்றும் ஏகாம்பரநாதர் கோவில் சார்பாக 600 உணவு பொட்டலங்களும் என மொத்தம் 1200 உணவு பொட்டலங்கள் (கருவேப்பிலை மற்றும் மூக்கடலை சாதம்) தயாரிக்கப்பட்டு காஞ்சீபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு வழங்கப்பட்டன.

காஞ்சீபுரம் இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் பொ. ஜெய ராமன் தலைமையில் கோவில் செயல் அலுவலர்கள் என்.தியாகராஜன், ஆ.குமரன் மற்றும் 50க்கும் மேற்பட்ட திருக்கோவில் பணியாளர்கள் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# 7வது இன்டோ – நேபாள் இன்டர்நேஷனல் கராத்தே பெடரேஷன் போட்டி: ஆலிம் முஹம்மது சாலிஹ் என்ஜினியரிங் கல்லூரி மாணவனுக்கு தங்கப் பதக்கம்



**சென்னை, மே.18–**

**ஆவடி, ஆலிம் முஹம்மது சாலிஹ் என்ஜினியரிங் கல்லூரி மாணவன் முகமத் உம்ராஸ் ஷரீப் சமீபத்தில் நேபாளத்தில் நடந்து முடிந்த 7வது இன்டோ – நேபாள் இன்டர்நேஷனல் பெடரேஷன் போட்டிகளில் தங்க பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். இவர் பி.டெக்(ஐடி) 2ம் ஆண்டு படித்து வருகிறார். 21 வயதுக்குட்பட்ட பிரிவில் கராத்தே போட்டியில் இவர் தங்கம் பதக்கம் வென்றார்.**

இக்கல்லூரி மாணவன் முகமத் உம்ராஸ் ஷரீப் சமீபத்தில் நடைபெற்ற போட்டியில் தகுதி பெற மாநில அளவில் நாமக்கலில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்று பிறகு தேசிய அளவில் கோவாவில் நடைபெற்ற 7வது தேசிய பெடரேஷன் கோப்பை ஊரக விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றதன் அடிப்படையில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்போட்டிகளில் 4 போட்டிகளில் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் தனது திறனை வெளிப்படுத்தி தங்க பதக்கம் வென்றார்.

இக்கல்லூரியின் நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பில் அல்ஹஜ் எஸ் சேகு ஜமாலுதீன், (செயலாளர்) முகமத் உம்ராஸ் ஷரீப்க்கு பாராட்டு தெரிவித்து ரூ.40 ஆயிரம் பரிசு தொகை வழங்கி சிறப்பித்தனர். இந்த வெற்றியை தொடர்ந்து இவர், தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் ஆசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார்.

# ஜெம் மருத்துவமனை டாக்டர் பிரவீன் ராஜுக்கு சாதனை விருது



**சென்னை, மே.18–**

**ஜெம் மருத்துவமனையில் உடல் பருமன் அறுவை சிகிச்சைத் துறையின் தலைவர் டாக்டர் பிரவீன் ராஜுக்கு இத்துறையில் இவரின் பெரும் பங்களிப்பை பாராட்டி சிறந்த ஆராய்ச்சியாளர் விருதை அகில இந்திய குடல் நோய் அறுவை சிகிச்சை சங்கம் இந்த ஆண்டிற்கான மாநாட்டில் வழங்கியுள்ளது.**

இந்த மதிப்புமிக்க விருதினை இந்தியாவின் நான்கு அறுவை சிகிச்சை நிபுணர்களும், தென்னிந்தியாவில் இவர் ஒருவர் மட்டுமே பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. விருதுடன் ஒரு லட்சம் பணமும் வழங்கப்பட்டது.

டாக்டர் பிரவீன்ராஜ் இந்த பரிசுத் தொகையினை ஜெம் மருத்துவமனை யில் பயிலும் முதுகலை மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்காக வழங்கியுள்ளார். அதுமட்டுமின்றி, இவர் அகில இந்திய உடல் பருமன் அறுவை சிகிச்சை சங்கத்தின் தலைவர் மற்றும் ‘‘சர்வதேச உடல் பருமன் அறுவை சிகிச்சை கூட்டமைப்பு’’ இந்திய அத்தியாயத்தின் தலைவராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


# வேப்கோ இந்தியா லிமிடெட்

CIN:L34103TN2004PLC054667

பதிவு அலுவலகம்:; ப்ளாட் எண் 3 (SP) 3-வது மெயின் ரோடு, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600 058.

Ph.91 44 42242000, Fax .91 44 42242009, www.wabco-auto.com, email: cvcs.info.india@zf.com

**31 மார்ச் 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்**

(ரூ. லட்சங்களில் EPS தவிர)

| விவரங்கள் | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| | 31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது) | 31.12.2020 (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2019 (தணிக்கை செய்யப்பட்டது) | 31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது) | 31.03.2020 (தணிக்கை செய்யப்பட்டது) |
| இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம் | 71,891.25 | 57,431.40 | 42,298.51 | 190,238.87 | 199,344.20 |
| வரி, தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன், நடப்பு காலத்திற்கு நிகர லாபம் (+) / நஷ்டம் (-) | 4,763.37 | 5,242.97 | 3,149.61 | 10,380.49 | 15,881.37 |
| தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (+) / நஷ்டம் (-) | 4,763.37 | 5,242.97 | 3,149.61 | 10,380.49 | 15,881.37 |
| தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (+) / நஷ்டம் (-) | 4,763.37 | 5,242.97 | 3,149.61 | 10,380.49 | 15,881.37 |
| நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப் பின் இதர விரிவான வருமானம்] | 4,997.28 | 5,108.27 | 3,300.73 | 10,185.59 | 15,801.71 |
| **சமபங்கு மூலதனம்** | | | | | |
| ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக முந்தைய கணக்கு ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையின்படி) | | | | 198,691.96 | 188,506.37 |
| **ஒரு பங்கு சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட இயக்கங்களுக்கு)** | | | | | |
| அடிப்படை | 25.11 | 27.64 | 16.61 | 54.73 | 83.73 |
| டைல்யூட்டட் | 25.11 | 27.64 | 16.61 | 54.73 | 83.73 |

**குறிப்புகள் :**

1. மேற்கண்ட மார்ச் 31, 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை முடிவுகள் தணிக்கையாளர் குழுவினால் மறுபார்வையிடப்பட்டு, அவர்கள் பரிந்துரையின்படி, இயக்குனர் குழு மே 17, 2021 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கண்ட மார்ச் 31, 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் நிறுவன தணிக்கையாளர்களால் வரையறைக்குபட்ட ஆய்வுக்குட்பட்டது.
2. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133, மாற்றப்பட்ட இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டு விதிகள் 2015, மற்றும் இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டுகள் (இண்ட் ஏஎஸ்)-க்கு ஏற்றவாறு நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
3. செயல்பாடுகளின் வருவாய் பின்வருவனவற்றினை உள்ளடக்கியுள்ளது.

| | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| | 31.03.2021 | 31.12.2020 | 31.03.2019 | 31.03.2021 | 31.03.2020 |
| பொருட்கள் விற்பனை | 66,431.59 | 51,905.33 | 35,868.11 | 166,642.54 | 172,794.58 |
| மற்றவைகள் | 4,800.73 | 4,744.31 | 4,617.28 | 19,707.47 | 20,161.57 |
| **மொத்தம்** | **71,232.32** | **56,649.64** | **40,485.39** | **186,350.01** | **192,956.15** |

4. கம்பெனி இயக்கம் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் மற்றும் அது சம்பந்தமான சேவைகள் சம்பந்தப்பட்ட ஒரு துறையை மட்டும் சார்ந்தது.
5. 31 மார்ச், 2021 அன்று முடிவடைந்த நிதியாண்டில், ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதி அறக்கட்டளை ("அறக்கட்டளை")யில் இருந்த குறித்த கால ஊழியர்கள் நிலுவைத் தொகை வழங்கல் மற்றும் தீர்த்தலில் சில முறைகேடுகள் நடந்திருக்க கூடிய வாய்ப்பு இருப்பதாக நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது. இது தொடர்பாக அறக்கட்டளை மற்றும் நிறுவனத்திலிருந்து குறித்த கால ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட பண பட்டுவாடாக்களை விசாரிக்கவும் / உண்மைத்தன்மையை கண்டறியவும், மேற்கொள்ள வேண்டிய பிற நடவடிக்கைகளையும் நிர்வாகம் பரிசீலித்து வருகிறது. இச்சூழலில் முதற்கட்ட மதிப்பீடாக ரூ. 500 லட்சம் தொகையை செலவாக நிர்வாகம் பதிவு செய்துள்ளது. தணிக்கையாளர்களின் அறிக்கையில் இது குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.
6. மார்ச் 31, 2021ல் முடிவடைந்த காலாண்டு, மார்ச் 31, 2020ல் முடிவடைந்த காலாண்டிற்கான கணக்குகள் முழு நிதியாண்டிற்கு தணிக்கை செய்யப்பட்ட கணக்கு மற்றும் தணிக்கை செய்யப்படாத வெளியிடப்பட்ட கணக்கு ஆகியவற்றுடன் சமன்செய்யப்பட்ட கணக்குகளாக மூன்றாவது காலாண்டு வரைக்கான தற்போதைய கணக்குடன் சம்மந்தப்பட்ட நிதியாண்டில் குறைந்தபட்ச ஆய்வுக்கு உட்பட்டதாகும்.
7. மார்ச் 31, 2021ல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒரு பங்கிற்கு ரூ.11/– (முகமதிப்பு ரூ.5/– ஒரு பங்குக்கு) ஈவுத்தொகை செலுத்த இயக்குநர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது.
8. முந்தைய காலாண்டுக்கான / காலத்திற்க்கான தொகைகள் நடப்பு காலாண்டுக்கான / காலத்திற்கான காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டது.

இயக்குநர் குழு சார்பாக
**P கண்ணியப்பன்**
நிர்வாக இயக்குநர்

சென்னை
17.05.2021